ஆனால் மணலி அவர்கள் பேசிய நேரத்தில் நான் இங்கு இல்லை இங்கே இல்லாவிட்டாலும் அவர்களுடைய பேச்சைப் படித்துப் பார்த்தேன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். போராட்டம் இல்லாமல் லட்சியங்களில் வெற்றிபெற முடியாது என்ற உணர்வை பெரியவர் மணலி அவர்கள் தன்னுடைய உரையிலே எடுத்துக் காட்டினார்கள். நான் ஷேக் அப்துல்லாவை என் இல்லத்திலே சந்தித்த நேரத்திலும், ஜெயபிரகாஷ் நாராயண் அவர்களை டெல்லியில் சந்தித்த நேரத்திலும் பெற்ற உணர்வுகள் அவைகள்தான். என்ன உரையாடினேன் என்பதெல்லாம் வேறு விவகாரம். ஆனால் நான் பெற்ற உணர்வுகள், “ தியாகங்கள் செய்வதற்கு யார் தயாராக இருந்தாலும் அவர்கள் லட்சியங்களில் நிச்சயமாக வெற்றி பெற முடியும் ” என்பதுதான்.

அப்படியானால் பதவியை விட்டு வெளியே வாருங்களேன் என்று அழைக்கிறார்கள். அழைப்பதற்கான அவசரம் என்ன வென்றால் யார் யார் என்னென்ன மந்திரிகள் என்று இப்போதே நிர்ணயித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனே வந்து உட்கார்ந்துவிடலாம் என்று பார்க்கிறார்கள். பதவியை விட்டு கருணாநிதியோ, நாவலரோ, பேராசிரியரோ, மற்றவர்களோ போய்விட்டால், மிச்சம் இருக்கிற 160 பேரும் இங்கே உட்கார்ந்திருப்பார்கள் ; அவர்களை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தலாம் என்று யாராவது கருதினால் அது பகல் கனவு : பதவியை விட்டு போராட்டத்தில் தி.மு.கழகம் இறங்குகிறது என்றால் அத்தனை பேரும் இறங்குகிறார்கள் என்றுதான் அர்த்தம். அதற்குரிய காலம் வரத்தான் போகிறது. அந்த நேரத்தில், அந்தப் போராட்ட நினைவோடு, உணர்வோடு மாநில சுயாட்சி பெறுவதற்கு அண்ணா வழியில் நாங்கள் அயராது பாடுபடுவோம்; பாடுபடுவோம் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றுக், நாளை காலை 9.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.53 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

127. Notification issued in G.O. Ms. No. 677, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Kadayanallur local planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

128. Notification issued in G.O. Ms. No. 96, Rural Development and Local Administration, dated the 22nd January 1975 in regard to inclusion of Public Works Department Circuit House within the jurisdiction of Courtallam Township. [Laid on the table of the House under section 4(3) of the Courtallam Township Act, 1954 (Tamil Nadu Act XVI of 1954).]

129. Notification issued in G.O. Ms. No. 2889, Home, dated the 31st December 1974 in regard to increase of tax on stage carriages and contract carriages with effect from the 1st January 1975. [Laid on the table of the House under section 26(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

B. Reports, Notifications and Other Papers.

53. Errata issued in Memorandum No. 122820/CE/74-2, Rural Development and Local Administration, dated the 16th October 1974 to Notification No. II (2)/RUL/3649 (b) 74, published at 1 and 2 in Part II — Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 12th August 1974.

54. Errata issued in Memorandum No. 164916/ME/74-1, Rural Development and Local Administration, dated the 30th December 1974, to Notification No. II(2)/RUL/283(aai)/74, published at pages 10 to 14 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 19th January 1974.

55. Sixth and Seventh Reports (Fifth Assembly) of the Committee on Delegated Legislation.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
24 OCT 1975
MADRAS